TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8044357

1. District மாவட்டம் Coimbatore PS காவல்நிலையம் V&AC Year ஆண்டு 2022 FIR No. மு.த.அ. எண் 03/2022/AC/CB Date நாள் 04.02.2022

2. (i) Act சட்டம் The Prevention of Corruption Act 1988, as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018. Sections பிரிவுகள் 7(a) and 7(b)
   (ii) Act சட்டம் Sections பிரிவுகள்
   (iii) Act சட்டம் Sections பிரிவுகள்
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் 24.01.2022 Date to நாள் வரை 03.02.2022
   Time Period நேர அளவு Time from நேரம் முதல் - Time to நேரம் வரை 17.00 hrs
   (b) Information Received at PS Date காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 04.02.2022 Time நேரம் 07.45 hrs
   (c) General Diary Reference Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 04.02.2022 Time நேரம் 07.45 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Tamil Computer typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் At about 8 km South
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி The Tahsildar, North Taluk office, Coimbatore.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் M. Sinnaraj (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Maruthaiya Gowder
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 61 Yrs (d) Nationality நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation தொழில் Agriculture (g) Address : முகவரி 5/155, Palamalai Road, Naickenpalayam (Po) Coimbatore.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars: (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1) Tmt. Gokilamani, Tahsildar, North Taluk Office, Coimbatore.
   2) Tr. Selvam, Deputy Tahsildar (Hq), North Taluk office, Coimbatore.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   - No delay.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) -

10. Total value of properties stolen / involved
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு -

11. Inquest Report / Un-natural death Case No. if any
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required)
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

seperate sheet enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS ..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

M. [signature] 04/02/2022

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer-in-charge, Police Station [signature] 04/02/2022
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court 04.02.2022
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் P. Parimaladevi
Rank: நிலை Inspector of Police No. எண்
VLAC, Coimbatore.

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p.2

**பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:**

**கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண். 3/2022/AC/CB, u/s. 7(a) and 7(b) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி...**

இன்று 04.02.2022-ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 07.45 மணிக்கு காவல் ஆய்வாளர் P.பரிமளாதேவி ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபொழுது க.எண்.5/155, பாலமலைரோடு, நாயக்கன்பாளையம் (அஞ்சல்), கோயம்புத்தூர்-641020 என்ற முகவரியில் குடியிருக்கும் மருதைய கவுடர் என்பவரது மகன் M.சின்னராஜ் என்பவர் கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகம் ஆஜராகி தமிழில் தட்டச்சு செய்த ஒரு எழுத்து மூலமான புகார் மனுவை என்னிடம் கொடுத்தார். நான் அந்த புகாரினை பெற்று படித்து பார்த்தேன். புகார் சம்பந்தமாக இரகசிய விசாரணை மேற்கொண்டதில், கோயம்புத்தூர் வடக்கு வட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரியும் வட்டாட்சியர் திருமதி.கோகிலாமணி மற்றும் தலைமையிடத்து துணை வட்டாட்சியர் திரு.செல்வம் ஆகியோர்கள் வாதிக்கு செல்வநிலை சான்றிதழ் வழங்க வாதியிடம் லஞ்சமாக பணம் ரூ.25,000/-ம் கேட்டிருப்பது தெரியவந்தது. மேற்படி புகாரின் அடிப்படையில் எதிரிகளின் நற்பெயர் குறித்து இரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டதில், எதிரிகளின் நடத்தை சர்ச்சைக்குரியது என்றும், புகார்தாரருக்கும் எதிரிகளுக்கும் தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உண்டா என்பது குறித்து மேற்கொள்ளப்பட்ட இரகசிய விசாரணையில் அவ்வாறு முன்விரோதம் எதுவுமில்லை என்றும், அவரது புகார் நம்பகதன்மை கொண்டது என்றும் தெரியவந்தது. நான் மேற்கொண்ட ரகசிய விசாரணையில் இருந்து எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய தகுந்த முகாந்திரம் இருப்பது தெரியவந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று, இன்று 04.02.2022-ம் தேதி 08.45 மணிக்கு கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.3/2022/AC/CB, u/s.7(a) and 7(b) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018-ன் படி மேற்படி எதிரிகளான கோயம்புத்தூர் வடக்கு வட்டாட்சியர்

அலுவலகத்தின் வட்டாட்சியர் திருமதி.கோகிலாமணி மற்றும் தலைமையிடத்து துணை வட்டாட்சியர் திரு.செல்வம் ஆகியோர்கள் மீது குற்ற வழக்கு பதிவு செய்தேன். புகார்தாரரின் புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் M.சின்னராஜ், வயது-61 த/பெ.மருதைய கவுடர், க.எண்.5/155, பாலமலைரோடு, நாயக்கன்பாளையம் (அஞ்சல்), கோயம்புத்தூர்-641020. பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, நெ.4, ராமசாமிநகர், முதல் தெரு, தீயணைப்பு துறை அருகில், கவுண்டம்பாளையம் (அஞ்சல்), கோயம்புத்தூர்-641 030. அம்மா, நான் மேலே கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது நாயக்கன்பாளையம் ஊராட்சியின் துணை தலைவராக உள்ளேன். நான் கோயம்புத்தூர் வடக்கு வட்டம், பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சிக்குட்பட்ட இந்திராகாந்தி வணிக வளாகத்தில் கடை எண்-15-க்கு குத்தகைதாரராக இருந்து வருகிறேன். தற்போது மேற்படி கடையை அரசு ஏலம் விடுவதாக உள்ளார்கள். எனவே மேற்படி ஏலத்தில் கலந்து கொள்ளுவதற்காக சொத்து மதிப்பு சான்றிதழ் தேவைப்படுவதால் நாயக்கன்பாளையம் கிராமம் க.ச.எண்.275/2-ல் எனக்கு பாத்தியப்பட்ட 2.58 ஏக்கர் விவசாய பூமிக்கு ரூ.15,00,000/-க்கு சொத்துமதிப்பு சான்றிதழ் வேண்டி கோயம்புத்தூர் வடக்கு வட்டாட்சியர் அவர்களுக்கு 12.01.2022-ம் தேதியில் இணையதளத்தில் விண்ணப்ப எண்.TN-1720220112122-ன் மூலம் பதிவுசெய்தேன். அதன்படி சம்மந்தப்பட்ட V.A.O மற்றும் RI ஆகியோர்களிடம் உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டு உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு 13.01.2022-ம் தேதியன்று பரிந்துரை செய்யப்பட்டது. அதன் பின்னர் 24.01.2022-ம் தேதி காலை கோவை வடக்கு வட்டாட்சியர் அலுவலகத்திற்கு சென்று தலைமையிடத்து துணை வட்டாட்சியர் அவர்களை சந்தித்து எனது செல்வநிலை சான்றிதழ் குறித்து விபரம் கேட்டேன். அதற்கு அவர், வட்டாட்சியர் அவர்கள் அலுவலகத்தில் இருப்பதாகவும், அவரை நேரில் சென்று பார்த்துவாருங்கள் என்றும் சொன்னார். அதன்படி நானும் வட்டாட்சியர் அவர்களை சந்தித்து அவரிடம் எனக்குரிய செல்வநிலை சான்றிதழ் குறித்து விபரம் கேட்டபோது அவர்கள் என்னிடம் தலைமையிடத்து துணை வட்டாட்சியரிடம் விபரம் சொல்லியுள்ளதாகவும், அதனால் அவரை சென்று பாருங்கள் என்றும் சொன்னார். நான் மீண்டும் DT-யை சென்று பார்த்தேன். அவர் அரசு கட்டணம் செலுத்தவேண்டும் என்றும் 1 லட்சத்திற்கு ரூ.400 வீதம், 15 லட்சத்திற்கு ரூ.6,000/- Challan மூலம் வங்கியில் செலுத்தி Challan-ஐ

கொண்டுவருமாறு கேட்டார். அதன்படி நான் State Bank of India வங்கி Challan No.20220124005412-ன் மூலம் ரூ.6,000/- செலுத்தி ரசீது பெற்று கோவை வடக்கு வட்டாட்சியர் அவர்களை அன்றைய தினமே சந்தித்து Challan செலுத்திய விபரம் சொல்லி அதை காண்பித்தேன். அவர் DT-ஐ பாருங்கள் அவரிடம் சில பார்மாலிட்டிஸ் சொல்லியிருக்கேன் என்று சொன்னார். நான் DT-ஐ சந்தித்து மேற்படி விபரம் குறித்து சொன்னேன். அதற்கு அவர் செல்வநிலை சான்றிதழ் வழங்க சொத்து மதிப்பீட்டு தொகையில் 1%-ஐ வட்டாட்சியர் கேட்டுள்ளதாகவும், அதனால் எனது சொத்து மதிப்பு ரூ.15,00,000/-க்கு செல்வநிலை சான்றிதழ் வழங்க வட்டாட்சியருக்கு 1% அதாவது 15,000/- ரூபாயும், தனக்கு தனியாக ரூ.10,000/-த்தை தன்னிடமும் ஆக மொத்தம் ரூ.25,000/- கொடுத்தால்தான் செல்வநிலை சான்றிதழை பெறமுடியும் என்று தெரிவித்தார். அதற்கு நான் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்று சொல்லி ஏதாவது குறைக்க முடியுமா என்று கேட்டேன். அதற்கு அவர் பணம் ஏதும் குறைக்க முடியாது என்றும், வேண்டுமனால் இப்போதைக்கு ரூ.15,000/-த்தை கொடுங்க மீதி பணம் ரூ.10,000/- சான்றிதழ் வாங்கிய பிறகு கொடுக்குமாறும் சொன்னார். அதற்கு நான் அவரிடம் தற்சமயம் அவ்வளவு பணம் இல்லை என்று சொல்லி வந்துவிட்டேன். நான் 27.01.2022-ம் தேதி மேற்படி சான்றிதழ் குறித்து இணைய தளத்தில் பார்வையிட்டபோது எனக்குரிய சான்றிதழானது பதிவேற்றம் செய்யப்படாமலிருந்தது. எனவே நான் கடந்த 28.01.2022-ம் தேதி கோவை வடக்கு வட்டாட்சியர் அலுவலகத்திற்கு சென்று பார்த்தபோது வட்டாட்சியர் அலுவலகத்தில் இல்லை அதனால் தலைமையிடத்து துணை வட்டாட்சியர் திரு.செல்வம் அவர்களை மீண்டும் சந்தித்து மேற்படி சான்றிதழ் குறித்து கேட்டேன். அதற்கு அவர் ஏற்கனவே கேட்டிருந்த பணம் ரூ.25,000/-த்தை கொண்டுவந்துள்ளீர்களா என்று கேட்டார். நான் பணம் இன்னும் ரெடிபண்ண முடியவில்லை என்றும், ஏதாவது பாத்து பண்ணுங்க என்று சொன்னேன். அதற்கு அவர் ஏற்கனவே சொன்னதுபோல் பணம் ரூ.25,000/-த்தை கொடுத்தால்தான் வட்டாட்சியர் செல்வநிலை சான்றிதழை பதிவேற்றம் செய்வார் என்றும், அதனால் அவர்கள் கேட்ட பணத்தை கொடுத்துவிட்டு சான்றிதழை பெற்றுக்கொள்ளுமாறும் இல்லை என்றால் வட்டாட்சியர் அவர்களையே பாருங்கள் என்று சொன்னார். நானும் சரி என்று சொல்லி வந்துவிட்டேன். என்னால் அவர் கேட்ட பணம் ரெடி செய்ய முடியவில்லை அதன்பின் நான் வட்டாட்சியர் திருமதி.கோகிலாமணி

அவர்களை சந்தித்து பணத்தை குறைத்து கேட்கலாம் என்று எண்ணி 03.02.2022-ம் தேதி மாலை சுமார் 5.00 மணிக்கு கோவை வடக்கு வட்டாட்சியர் அலுவலகத்திற்கு சென்று வட்டாட்சியர் அவர்களை நேரில் சந்தித்து எனது செல்வநிலை சான்றிதழ் குறித்து கேட்டேன். அப்போது வட்டாட்சியர் அவர்கள் DT-யை பாத்திங்களா அவர் பணம் கொடுக்கவேண்டியது பற்றி சொன்னாரா என்று கேட்டார். அதற்கு நான் அவரிடம் எனது சொத்தின் மதிப்பில் 1% ஆன 15,000/- ரூபாயை தங்களுக்காகவும், தலைமையிடத்து துணை வட்டாட்சியர் அவர்களுக்கு தனியாக ரூ.10,000/-ம் சேர்த்து மொத்தம் ரூ.25,000/-ம் கொடுக்க வேண்டும் என்று சொன்னதாக தெரிவித்தேன். அதற்கு வட்டாட்சியர் அவர்கள் பணம் ரூ.25,000/-ஐ அவரிடம் கொடுத்துட்டீங்களா இல்லையா என்று கேட்டார். அதற்கு நான் கொடுக்கலைங்க, மேடத்தை பார்த்து பணத்தை கொஞ்சம் குறைத்து கேட்டகளாம்னு வந்தேன் என்று சொன்னேன். வட்டாட்சியர் அவர்கள் DT-க்கு Covid positive- காரணத்தால் லீவில் இருப்பதாக சொல்லி, இப்ப பணம் கொண்டு வந்திருந்தா பணத்தை கொடுங்க இப்பவே Approval பண்ணி கொடுக்குறேன் என்று சொன்னார். அதற்கு நான் பணத்தை கொஞ்சம் குறைத்துகொள்ளும்படி கேட்டேன். அதற்கு வட்டாட்சியர் ரூ.6,000/-க்கான Challan கட்டி Scan பண்ணிவிட்டீங்களா என்று கேட்டார். நான் எல்லாம் பண்ணியாச்சுங்க என்று சொன்னேன். அதற்கு அவர் ரூ.25,000/-த்திலிருந்து குறைக்க முடியாது என்றும், நாளைக்கு காலையில 10.30 மணிக்கு மேல் எனது அலுவலகத்திற்கு வந்து ரூ.25,000/-த்தை கொடுத்துவிட்டு இங்கேயே சான்றிதழை வாங்கிகொள்ளுங்கள் என்று சொன்னார். அதற்கு நானும் சரி என்று சொல்லி வந்துவிட்டேன். அதன் பிறகு நான் யோசித்து பார்த்ததில் லஞ்சம் கொடுத்து செல்வ நிலை சான்றிதழை வாங்க எனக்கு விருப்பமில்லை. ஆகையால் செல்வநிலை சான்றிதழை வழங்க என்னிடம் லஞ்சமாக ரூ.25,000/-த்தை கேட்கும் மேற்படி கோயம்புத்தூர் வடக்கு வட்டாட்சியர் திருமதி.கோகிலாமணி மற்றும் தலைமையிடத்து துணை வட்டாட்சியர் திரு.செல்வம் ஆகியோர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, sd/-(xxxx)04.02.2022 Respected Sir, Received the complaint on 04.02.2022 at about 07.45hrs sd/-(xxxx) 04.02.2022 (P.Parimaladevi), Inspr. of Police, V&AC, Coimbatore. Respected Sir, After conducting a discreet enquiry, a case in Coimbatore V&AC Cr.No.3/2022/AC/CB u/s. 7(a) and 7(b) of the Prevention of Corruption Act,

1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 was registered by me on 04.02.2022 at 08.45hrs sd/-(xxxxx) 04.02.2022 (P.Parimaladevi), Inspr. Of Police, V&AC, Coimbatore. முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார்தாரரின் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்து வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

04/02/2022

(P.பரிமளாதேவி)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.